# அகழ்வாராய்ச்சியில் தமிழும் தமிழரும்

## அறிமுகம்

தமிழக வரலாற்றையும் பண்பாட்டையும் தெரிந்து கொள்ள அகழ்வாராய்ச்சி முக்கியத்தடமாகும். இதன்மூலம் கிடைக்கும் ஆதாரங்கள் உண்மையும் நம்பகத்தன்மையும் வாய்ந்தவை. அவை அறிவியலின்வழி நிரூபிக்கப்படுவதால் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக மாறுகிறது. அகழ்வாராய்ச்சி ஆங்கிலேயரின் காலத்திலேயே தொடங்கப்பட்டது. எனினும் அவை அனைத்தும் இந்தியாவில் கிடைக்கும் கனிம வளங்களைத் தேடும் முயற்சியே ஆகும். எனினும் ஆய்வாளர்கள் பலர் ஆர்வத்தின் காரணமாக நீலகிரி முதல் ஆதிச்சநல்லூர் வரை பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டது.

## அகழ்வாராய்ச்சி விளக்கம்

ஒரு தளத்தில் பல வகையான தரவுகளை மீட்டெடுப்பது அகழ்வாராய்ச்சி எனப்படும். தொன்மையான பொருட்கள் காணப்படுகிறது இடங்களைக் கண்டுபிடித்து வெளிப் படுத்துவதும் பதிவு செய்வதும் இவ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கமாகும். அகழ்தல் என்றால் தோண்டுதல் என்று பொருள். ஒரு தளத்தை ஆய்வு செய்வதற்கான வழிமுறைகள் பற்றியதாக அகழ்வாராய்ச்சி அமையும். இப்புரிதலோடு உருவான அரும்பொருள் சேகரிப்பது என்பது தொல்லியல் துறையாக வளர்ந்தது.

Cbacollege

## கீழடி அகழாய்வில் கிடைத்த தொல்லியல் பொருட்கள்

பானைகள், முதுமக்கள் தாழிகள், ஆபரண பொருட்கள் உள்பட பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய பொருட்கள் பல கிடைத்துள்ளன. நூற்றுக்கணக்கான பழங்கால பொருட்கள் பல கிடைத்துள்ளன. கீழடி ஏழாம்கட்ட அகழாய்வில் அகரத்தில் மட்டும் விலங்கின் உருவபொம்மை, சுடுமண்ணால் ஆன பெண்முகம், செம்பு நாணயங்கள், புகைப்போக்கி குழாய் உள்ளிட்ட 800க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளன. கண்ணாடி, யானைதந்தம், சங்கு ஆகியவற்றால் ஆன அணிகலன்களும் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

## கீழடியில் கிடைக்கப் பெற்றுள்ள தொல்லியல் கண்டுபிடிப்புகள்

கீழடி அகழாய்வு வெளிக்கொணரும் பண்பாட்டுக் கூறுகளை செங்கல் கட்டுமானங்கள், உறை கிணறுகள், கூரை ஓடுகள் மற்றும் அரிய தொல்பொருட்களான தங்க அணிகலன்களின் பாகங்கள், செம்பிலான பொருட்கள், இரும்பு பயன்பாட்டுப் பொருட்கள், சுடுமண்ணாலான ஆட்டக்காய்கள், விளையாட்டுச் சில்லுகள், காதணிகள், தக்களிகள், சுடுமண்ணாலான மணிகள், கண்ணாடி மணிகள், மதிப்பு நிறைந்த மணிகள், பானை ஓடு வகைகளான கருப்புசிவப்பு நிற பானை ஓடுகள், ரோமநாட்டைச் சார்ந்த ரௌலட் பானைஓடுகளின் சாயல் கொண்ட பானை ஓடுகள் ஆகியவைகள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. வரைவதற்கு முன்னர் மற்றும் பின்னர் வரையப்பட்ட குறியீடுகள், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் போன்றவையும் கீழடி அகழ்வாயில் கண்டெடுக்கப்பட்டு உள்ளது.

Cpa College